(சுருக்கம்)

திருத்திய ஊதிய விகிதங்கள், 2009 – பள்ளிக் கல்வித் துறையின் கீழ் பணியாற்றும் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு ஊதிய திருத்தம் மற்றும் தனி ஊதியம் அனுமதித்து ஆணையிடப்படுகிறது.

---

**நிதி (சி.எம்.பி.சி)த் துறை**

அ.ஆ. நிலை எண்:**58** நாள்: **25—2—2011**.
மாசி, **13.**
திருவள்ளுவர் ஆண்டு, 2042.

**படிக்கவும்:--**

| | |
|---|---|
| 1. | அ.ஆ.நிலை எண்: **234**, நிதி (ஊதியப்பிரிவு) த்துறை, நாள்: 01—6—2009. |
| 2. | அ.ஆ.நிலை எண்: **270**, நிதி (ஊதியப்பிரிவு) த்துறை, நாள்: 26—8—2010. |
| 3. | அ.ஆ.நிலை எண்: **23**, நிதி (ஊதியப்பிரிவு) த்துறை, நாள்: 12—1—2011. |
| 4. | உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள். |

**- - - - - -**

**<u>ஆணை</u>** :--

அலுவலர்குழு, 2009-ன் பரிந்துரைகளின்படி பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கப் பள்ளி கல்வித் துறைகளின் கீழ் பணிபுரியும் ஆசிரியர்களின் திருத்திய ஊதிய விகிதங்கள் அவர்களின் முந்தைய ஊதிய விகிதங்களுக்கு நிகரான திருத்திய ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு 1—1—2006 முதல் கருத்தியலாகவும் 1—1—2007 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

**2)** பின்னர், ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு மட்டும் மாதம் ஒன்றுக்கு ரூ.500/– சிறப்புப்படி 1—8—2010 முதல் அனுமதித்து மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டது. அதன் பின்னர், பட்டதாரி ஆசிரியர், முதுகலை பட்டதாரி ஆசிரியர், தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர், நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர், மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் / மாவட்ட கல்வி அலுவலர்கள் ஆகியோரின் ஊதிய விகிதங்கள் 1--1--2006 முதல் கருத்தியலாகவும் பணப்பயன் 1--1--2011 முதல் பெறும் வகையில் திருத்தி அமைத்தும் இடைநிலை ஆசிரியர் மற்றும் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஆகியோருக்கு மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்ட சிறப்புப் படிக்கு பதிலாக தனி ஊதியம் 1--1--2011 முதல் அனுமதித்தும் மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டது.

**3)** இந்நிலையில் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சங்கங்கள், முதுகலை பட்டதாரி ஆசிரியர் மற்றும் நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர் ஆகியோருக்கு திருத்திய ஊதிய விகிதத்தில் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடத்திற்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தரஊதியத்தினை விட தற்பொழுது அதிகமான தரஊதியம் நிர்ணயித்து

**/த.பி.பா/**

மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளதால் ஊதிய முரண்பாடு எழுந்துள்ளது என்பதனால் இவ்வூதிய முரண்பாட்டினைக் களைந்து உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடத்தின் ஊதிய விகிதத்தினை திருத்தி அமைத்து ஆணை வெளியிடுமாறு அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

4) உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் சங்கங்களின் கோரிக்கைகளை அரசு நன்கு ஆராய்ந்ததில் முதுகலை பட்டதாரி ஆசிரியர் மற்றும் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களுக்கு ஏற்கனவே பழைய ஊதிய விகிதத்திற்கு இணையான சமநிலை திருத்திய ஊதியம் ரூ.9300—34800 + தர ஊதியம் ரூ.4,600/- அனுமதிக்கப்பட்டிருந்தும் மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் முதுகலை பட்டதாரி ஆசிரியருக்கு உயத்தி வழங்கப்பட்ட தர ஊதியம் ரூ.4,800/- உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியருக்கு அனுமதிக்கப்படாததாலும், உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடத்திற்கு திருத்திய ஊதிய விகிதத்தில் அனுமதிக்கப்பட்ட திருத்திய ஊதியம் + தர ஊதியத்திற்கு கீழ் நிலையில் ரூ.9300—34800 + தர ஊதியம் ரூ.4,500/- என நிர்ணயிக்கப்பட்டிருந்த நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களின் தர ஊதியம் மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ரூ.4,700/- என உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதாலும் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள திருத்திய ஊதிய விகிதத்தில் ஏற்பட்டுள்ள ஊதிய முரண்பாட்டினை களைந்து தக்க ஊதிய திருத்தம் மேற்கொள்ள வேண்டியது அவசியம் எனக் கருதி அதன் அடிப்படையில் உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பணியிடத்தின் ஊதிய விகிதத்தினை ரூ.9300—34800 + தர ஊதியம் ரூ. 4,600/--லிருந்து ரூ.9300—34800 + தர ஊதியம் ரு.4,800/--ஆக திருத்தம் செய்து அரசு ஆணையிடுகிறது.

5) மேற்கூறிய ஊதிய திருத்தம் 1--1--2006 முதல் கருத்தியலாகவும் 1—1—2011 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் நடைமுறைப்படுத்தப்படும். மேலும், சாதாரண நிலையில் உள்ள உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 1—1—2011 முதல் அனுமதிக்கப்பட்டுள்ள தனி ஊதியத்தில் எவ்வித மாற்றமும் இல்லாமல் தொடர்ந்து பெற அனுமதித்து ஆணையிடப்படுகிறது.

**/ஆளுநரின் ஆணைப்படி /**

**க. சண்முகம்,**
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
செயலாளர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை—9.
இயக்குநர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை—6.
மாநில கணக்குத் துறைத் தலைவர், கணக்குகள்(ம) உரிமைத் தொகை, சென்னை-18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர்(துணிக்கை—1 & 2), சென்னை -18.
மாநில கணக்குத் துறைத் தலைவர்(CAB), சென்னை -9 / மதுரை.
ஆணையர், கருவூலக் கணக்குத்துறை, சென்னை—15.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை-3.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை--9.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர்(வடக்கு/தெற்கு/கிழக்கு), சென்னை—1/35/5.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், மதுரை—625 001.
அனைத்து கருவூல அலுவலர்கள்/அனைத்து துணைக் கருவூல அலுவலர்கள்.

........../ 3 /

நகல் பெறுவோர்:
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை—9.
மாண்புமிகு துணைமுதலமைச்சரின் செயலாளர், சென்னை—9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை—9.
மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சரின் தனிச்செயலாளர், சென்னை—9.
அரசு தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை—9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், நிதித்துறை, சென்னை—9.
பள்ளிக்கல்வித்துறை, சென்னை—9.
நிதி (கல்வி--1)த்துறை, சென்னை—9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

பிரிவு அலுவலர்.